பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
18 06 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ் 20 ஆயிரம் கோடி ரூபாயை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வாரணாசியில் விடுவிக்கிறார்.
- சிவகங்கை மாவட்டம் கீழடியில் பத்தாவது கட்ட அகழாய்வுப் பணிகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.
- டெல்டா விவசாயிகளுக்கான குறுவை தொகுப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டுக்கு மாநில அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தின் சில பகுதிகளில் இன்று முதல் 4 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- **Veneto** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் 17வது தவணையை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வாரணாசியில் விடுவிக்கிறார்.

இதன்மூலம் நாடு முழுவதும் 9 கோடியே 26 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளுக்கு நேரடி பணப்பரிமாற்ற திட்டத்தின் மூலம் 20 ஆயிரம் கோடி ரூபாய் அளிக்கப்பட உள்ளது.

அத்துடன் 30 ஆயிரத்துக்கும் அதிகமான சுய உதவிக் குழுக்களுக்கு வேளாண் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களை பிரதமர் வழங்க உள்ளார்.

இதற்கிடையே காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறும் இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் பகுதியில் மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் பங்கேற்கிறார்.

நாமக்கல்லில் நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய தொழிலாளர் நலன் மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ராகுல் காந்தி, தமது வயநாடு மக்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் திரு. ராகுல் காந்தி ரேபரேலி மற்றும் வயநாடு தொகுதிகளில் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், வயநாடு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக திருமதி பிரியங்கா காந்தி போட்டியிடுவார் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. **Jake Sullivan** பிரதமர் திரு. நரேந்திர மோடியை நேற்று சந்தித்துப் பேசினார்.

இந்தியா – அமெரிக்கா இடையே செமிகண்டக்டர்கள், செயற்கை நுண்ணறிவு, தொலைத்தொடர்பு, பாதுகாப்பு, விண்வெளி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள ஒத்துழைப்பு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான முன்னெடுப்பு திட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர் பிரதமரிடம் விளக்கினார்.

அனைத்து துறைகளிலும் இருதரப்பில் ஏற்பட்டுள்ள ஒத்துழைப்பு,பிராந்திய, உலகளாவிய பிரச்சினைகளில் இரு நாடுகளின் ஒருங்கிணைப்பு ஆகியவை குறித்து திரு. மோடி அப்போது திருப்தி தெரிவித்தார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான கூட்டாண்மையை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதற்கு தாம் உறுதிபூண்டுள்ளதாக பிரதமர், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகரிடம் குறிப்பிட்டார்.

அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகரின் இந்திய பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவு வலுப்பெறும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தோ – பசிபிக் பிராந்தியம் மேலும் வளர்ச்சியடையும் என்று அது கூறியுள்ளது.

இரண்டு மிகப்பெரிய ஜனநாயக மற்றும் பழமை மிக்க நாடுகளான இந்தியாவும், அமெரிக்காவும் தங்களது தனித்துவம் மிக்க நட்புறவை பகிர்ந்து வந்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சிவகங்கை மாவட்டம் கீழடியில் பத்தாவது கட்ட அகழாய்வுப் பணிகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் இந்த அகழாய்வுப் பணியின் மூலம் மேலும் பல தொன்மையான பொருட்கள் கிடைக்கக்கூடும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் இன்று இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகள் இன்று தொடங்குகிறது. முதலாம்கட்ட அகழாய்வில் மொத்தம் 533 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டது.

<<<<>>>>

மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட பயன்படுத்தப்படும் மொபைல் எண்களை முடக்குமாறு தொலைதொடர்புத்துறை, அனைத்து தொலைதொடர்பு சேவையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அந்த வகையில் இணையதள குற்றச்செயல் மற்றும் நிதி மோசடிகளில் பயன்படுத்தியதாக 392 மொபைல் ஃபோன்களை முடக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஃபோன்களுடன் தொடர்புடைய 31 ஆயிரத்து 740 இணைப்புகளை மறு சரிபார்த்தல் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மறு சரிபார்த்தலுக்குப் பிறகு தவறுகள் கண்டறியப்பட்டால் மொபைல் எண்களையும், அதற்குரிய ஃபோன்களையும் முடக்குமாறு தொலைத்தொடர்புத்துறை கேட்டுக்கொண்டுள்ளது

<<<<>>>>

டெல்டா விவசாயிகளுக்கான குறுவை தொகுப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமியின் குறறச்சாட்டுக்கு மாநில அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில்., கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் மழை இல்லாத காலங்களில் குறுவை தொகுப்பானது எந்த அளவுகோலைப் பின்பற்றி விவசாயிகளின் தேவைக்கு வழங்கப்பட்டதோ அதைவிட கூடுதலாக அளிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

அந்த வகையில் 16 மணி நேர மும்முனை மின்சாரமும், ஒரு லட்சம் ஏக்கருக்கான 2 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் விதைகளும் கூடுதலாக வழங்கப்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளில் டெல்டா மாவட்டங்களில் இயற்கை இடர்பாடுகள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பேரிடர் நிவாரண நிதி மூலம் 270 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

குறுவை தொகுப்புத் திட்டத்தின் மூலம் 9 லட்சத்து 46 ஆயிரம் லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும் ஒரு லட்சத்து 47 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு கூடுதலாக சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் நெல் உற்பத்தி 2 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் சில பகுதிகளில் இன்று முதல் 4 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 2 நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென்தமிழக கடலோர பகுதிகள், தெற்கு மற்றும் மத்திய வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு இன்று முதல் 4 நாட்களுக்கு செல்ல வேண்டாம் என்று திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே சென்னையின் பல்வேறு பகுதிகளில் நள்ளிரவில் பரவலாக மழை பெய்துள்ளது.

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

ரஷ்யா – வடகொரியா இடையேயான ராணுவ ஒத்துழைப்பு கவலை அளிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக 5 பேர் உயிரிழந்தனர். 15 பேரை காணவில்லை.

<<<<>>>>

மணிப்பூர் மாநில மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சிக்கிம் மாநிலத்தில் நிலச்சரிவில் சிக்கிய 64 சுற்றுலாப் பயணிகள் நேற்று மீட்கப்பட்டனர்.

<<<<>>>>

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் இங்கிலாந்து **Durham** பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்று திரும்பிய 25 மாணவர்கள் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினை சந்தித்து தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

<<<<>>>>

தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூரில் தொழிற்பேட்டை அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருவதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை அருகே 4 சிறுமிகளுக்கு நடைபெற இருந்த திருமணத்தை சமூக நலத்துறை அதிகாரிகள் குழு தடுத்து நிறுத்தி சிறுமிகளை வேலூர் காப்பகத்தில் ஒப்படைத்தனர்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேம்பார் கடலில் நேற்று குளித்துக்கொண்டிருந்த சிறுமியும், இளைஞரும் கடல் அலையில் சிக்கி உயிரிழந்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Veneto** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 7-5, 6-3 என்ற செட் கணக்கில், செக் குடியரசின் **Dominika Salkova**-ஐ வென்றார்.

<<<<>>>>

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி, சூப்பர்-8 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

<<<<>>>>